# தம்பலகமம் கள்ளிமேடு சம்மாந்துறை
# ஸ்ரீ முத்துமாரியம்மன் காவியம்



ஆக்கம்

கவிஞர், சோதிடர் வி. சிகண்டிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த பாடல்களை ஒருசில மணித்தியாலங்களுக்குள் எழுதுவதற்கு திருவருள் புரிந்த ஸ்ரீ முத்துமாரியன்னையின் திருவடியைப் போற்றிப் பணிந்து அவளின் பொற்பாத கமலங்களுக்கு இப்பாக்களை சமர்ப்பணம் செய்து, இதனை வாங்கிப் படிக்கும் அன்பர்களுக்கு அம்பிகையின் திருவருள் கிடைப்பதற்கு வேண்டிக் கொள்வதோடு, இதனால் பெறப்படும் நிதி ஆலய வளர்ச்சிக்குப் பயன்படும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றேன்.

என்றும்

பணிவுடன்

வி. சிகண்டிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஆலையடி விநாயகனே
அனைத்துக்கும் முன்னவனே!
காலமெல்லாம் உன்னைப்பணிந்தேன்
கள்ளிமேட்டுக் கணபதியே
மாலவனின் மருகோனே!
மாந்தர்குறை தீர்ப்போனே!
கோலவிழி மாரியன்னை
காவியத்தை பாடருள்வாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி துணை

# சம்மாந்துறையுறை சக்தியே தாயே!

(1)

அம்மாவென்றன்பொடு உந்தனை அழைத்தால்
அண்டியே நோய்ப்பிணி யாவையுமழிப்பாய்
இம்மைதுயர் வறுமைகள் இல்லாது நீக்கி
இன்பமாய் வாழவே திருவருள் புரிவாய்!
உண்மை வடிவாய் நின்று உயிர்களைக் காத்து
உயர்வோடு வாழநல் வழிகாட்டியருவாய்
செம்மை மிகு தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே! தாயே!

(2)

ஆதிமுதல் சோதியாய் அமர்ந்திட்ட தாயே!
அழகோடு அமைதிநிழல் குடிகொண்டாய் நீயே!
ஓதிடும் அடியார்கள் உள்ளத்துயர் தீர்க்கும்
ஓங்கார ரூபியே! அருள்முத்து மாரியே!
நீதிநெறி தளைத்திட நீயருள்வாயே!
நீலவிழி ஆயிரம் அணியழகு தேவியே!
சாதிக்கும் தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே, நித்தியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3)

இன்பம் மிகு வயல்காற்று வந்துமணம் வீச
இணையில்லா உன்னருளை மானிடர்கள் பேச
வண்ணம்மிகு பலவடிவம் வையகத்தில் கொண்டு
மண்ணுயிரைக் காக்கின்ற மாரியே! நீலி!
துன்பமில்லா வாழ்வுக்கு துணையாக நின்று
தொழுவாரைத் தீங்கின்றிக் காத்தருள்புரிவாய்
கன்னல்விளை தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே தாயே!

(4)

ஈன்றெடுத்த உனக்கல்லோ பிள்ளைகளைத் தெரியும்
என்னென்ன தேவைகள் என்பதெல்லாம் புரியும்
தோன்றும் கருமாரி சிவகாமி என விளங்கும்
தொடரான பல நாமம் உடையவளே அம்மா!
மூன்று பெரும் சக்தியும் சித்தியும் நீயே!
மூவுலகை காத்தருளும் முத்து மாரியே!
சான்றபெரும் தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5)

உன்திருவருளுக்கு நிகரேது அம்மா!

உன்பார்வை பட்டாலே போவாரோ சும்மா!

கன்னல் கை ஏந்திய காமாட்சி நீயே!

காத்தவராயனை ஈன்றவளும் நீயே!

மின்னல் வடிவாய் திகழும் மீனாட்சி நீயே!

மாதவன் சகோதரி ஆனவளும் நீயே!

சன்மார்க்க தம்பலகமம் கள்ளிமேடு

சம்மாந்துறையுறை சக்தியே தாயே!

(6)

ஊர்மக்கள் பலபேர்க்கு காட்சியளித்தாய்

உனை நேரில் கண்டோர்கள் தஞ்சமடைந்தார்கள்!

பார்புகழ் குளக்கோட்டு அரசனாலான

பழம்பெரும் கோணேசரிடம் வந்த தாயே!

போர்வீரர் உனைக்கண்டு வியந்து பணிந்தார்

பழித்தோர்க்கு தண்டனை உடனே கொடுத்தாய்

சீர்நிறை தம்பலகமம் கள்ளிமேடு

சம்மாந்துறையுறை சக்தியே தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7)

என்றுமுனை தொழுவோர்க்கு எதுகுறையுமின்றி
ஏற்றமுடனவர் வாழ வரமருள்வாயம்மா
நின்றுதினம் வதைக்கின்ற ஊழிவினைத் துயரை
நீலவிழி பார்வையினால் மாற்றுவாயம்மா
தொண்டு செய்யும் அடியார்கள் தொல்லைகளை நீக்கி
துலங்கிட அவர்வாழ்வு நலமருள்வாயம்மா
தொண்டர் சூழ் தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே தாயே!

(8)

ஏராளர் பணியினால் இலங்கிடும் ஊரில்
எழில் கொஞ்சும் இடத்தினில் உறைந்திட்டாயே!
தாரளா வளமோடு தானம் செழிக்கும்
தமிழ்வீரர் பூமியில் தனம்கொண்ட தாயே!
பேரான பசுவினம் பால்சுரந்தளிக்கும்
பேறுகள் பெருமைகள் பலநூறு பெற்ற
சீரான தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9)

ஐம்பூத இயக்கமும் உன் செயலாகும்
அருள்விழிப் பார்வையால் அகிலமே அசையும்
ஐம்புலன் அடக்கியுனை அணுகுவார்தமக்கு
ஐயத்தை நீக்கியே அருள்மாரி பொழிவாய்!
பைந்தமிழ் செல்வியாய் பரமசிவன் தேவியாய்!
பாவலர் பாட்டு பொருளாவாயம்மா
செந்நெல் விளை தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே தாயே!

(10)

ஒளிகாட்டி தெளிவூட்டி வழிகாட்டுவாயே!
ஓம்சக்தி திரிசூலி மகமாரித்தாயே!
தளிர்விடும் வில்வையுடன் மகிழ மரநிழலில்
தாமரைப் பூவுறை தயாபரி நீயே!
புளியம்மரம் வேப்பையுடன் தென்னைபுடைசூழ
பூவாசம் குளிர்தென்றல் பொருதியுனைத் தழுவும்
செழிப்பான தம்பலகமம் கள்ளிமேடு
சம்மாந்துறையுறை சக்தியே தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11)

ஓதுவாருள்ளத்தில் ஒளியாகத் தோன்றி

ஓமென்ற தத்துவ நெறிகளை விளக்கி

தீதில்லா வாழ்வுக்கு திருவருள் புரிவாய்

திக்கெட்டும் ஆள்கின்ற கருமாரித்தாயே!

வேதவடியாய் வந்து வேப்பிலையையெடுத்து

மாறாத நோய்ப்பிணியை மாற்றிடுவாயம்மா

சாதக தம்பலகமம் கள்ளிமேடு

சம்மாந்துறையுறை சக்தியே தாயே!

(12)

ஔவைக்கு அருள் செய்த ஆனைமுகன் தாயே!

ஆறுமுக வேலனைப் பெற்றவளும் நீயே!

இவ்வையம் செழித்திட மாரியென வந்து

உருமாறி அருள்செய்யும் உமையவளே அம்மா!

ஔடதமான உன் நாமத்தை சொன்னால்

அகலாத நோய்கள்துயர் அகன்றிடுமம்மா!

சௌமிய தம்பலகமம் கள்ளிமேடு

சம்மாந்துறையுறை சக்தியே தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org